# கவிஞர்கள் பார்வையில் கலைஞர்!



புலவர் இந்திரகுமாரி



சின்னஞ்சிறுமிகள் போட்டிருக்கிற பின்னல் மாதிரி, இருளைக் கிழித்தபடி மின்னல் அடிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அதுதான் அன்றைய இரவை மழையிரவாக ஆக்கப்போகிற ஊழிப் பெருமழைக்கான முன்னுரை.

திருக்குவளையில் தொடங்கிய இளைஞர் கலைஞரின் கவிதைப் பயணமும் இத்தகையது தான். அது கவிதைக்கான இலக்கணங்களைத் தகர்த்து உணர்வையும் கனவையும் விதைத்த எழுச்சிக் கவிதைகளுக்கான முன்னுரை. தன்னுடைய தமிழ்ப் புலமையை காட்டிக்கொள்வதற்காகவோ, தூசு படிந்த மரபுகளைக் காப்பி அடித்து காசு பார்ப்பதற்காகவோ எழுதவில்லை அவர். அந்த வாலிப வயதிலேயே, அவரது ஒவ்வொரு எழுத்திலும் ஒரு அக்கினிக் குஞ்சு அடைகாக்கப்பட்டது. ஒவ்வொரு வார்த்தையிலும் பொறிபறந்தது. சுருங்கக் கூறின் இளைஞர் கலைஞரின் எழுத்து யாப்பிலக்கணச் சிறையை அடித்து உடைத்து வெளியே வந்த அக்கினிப் பறவை. அதுதான் அவரது பேரடையாளமாக பரிமாணம் பெற்றது.

இலக்கணத் தடைகளைத் துணிவுடன் அத்துமீறி எழுதும் முன்னணிக் கவிஞர்களில் ஒருவரான கலாப்ரியா, எந்தவகையில் கலைஞர் தங்களது முன்னோடி என்பதை, கலைஞரின் மறைவுக்குப்பின் சுட்டிக்காட்டினார். **“என் கவிதை யாப்பின்றிப் போனாலும் போகட்டும்….. என் மொழியும், இனமும் காப்பின்றி போகக் கூடாது”** என்ற கலைஞரின் வாக்குமூலத்தை அவர் நினைவுபடுத்தினார். தன் பேனா மக்களுக்கானது என்கிற கோட்பாட்டில் கலைஞர் உறுதியாக இருந்ததையே இது காட்டுகிறது.

மூத்த கவிஞரும், தமிழறிஞருமான ஈரோடு தமிழன்பன், கவிஞர் கலாப்ரியா சொன்னதை வழிமொழிகிறார். **“கவிதையை ஜனநாயகப் படுத்தியவர் கலைஞர். அதனால்தான் அத்தனைக் கவிஞர்களும் கலைஞருக்கு வாக்களிக்கிறார்கள்”** – என்றால் அவர் வெறும் எழுத்தாளராக இல்லாமல், எழுத்தாளர்களின் எழுத்தாளராக, கவிஞர்களின் கவிஞராக கலைஞர் இருந்தார் என்பது இதிலிருந்து புலனாகிறது.

எத்தனை எழுத்தாளர்களின் எழுத்து, ஒவ்வொரு நாள் காலையிலும், லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடைந்திருக்கும்? கலைஞர்தான் அதை சாதித்தார். ஒவ்வொரு நாள் காலையிலும், அவரது முழுப் பக்க எழுத்தோவியம், உறங்கிக்கொண்டிருந்தவர்களையும் தட்டியெழுப்புகிற அளவுக்கு முரசொலியாய் ஒலித்தது. உடன்பிறப்புகள் மட்டுமல்ல, எதிரிகளும் அதை மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது. அறிவும் ஆவேசமும், மகிழ்வும் நெகிழ்வும் நீக்கமற நிறைந்திருந்தன கலைஞரின் கடித இலக்கியங்களில்! அதில், பொய்மை இல்லை; உண்மை இருந்தது. குரோதம் இல்லை; கோபம் இருந்தது. அந்தக் கோபம் தார்மீகக் கோபம். ஏய்க்கப்படுகிற மக்களின் நிலை கண்டு கொதித்து எழுந்த ஒரு தலைவனின் கோபம். கடிதமாகட்டும், கவிதையாகட்டும்…. அவரது ஆவேச எழுத்துகள் ஒவ்வொன்றும் தமிழ் எழுத்துகளாலேயே தயாரிக்கப்பட்ட பாஸ்பரஸ். இதைத்தான் தனக்கேயுரிய சுருக்கத் தமிழில் இப்படிச் சொன்னார், கவிக்கோ அப்துல் ரகுமான்.

**“கலைஞரின் பேனா தீக்குச்சி …….**
**தாளில் உரசினால் தீப்பிடிக்கிறது…”**

கலைஞரின் பேனாவோடு உரசிப்பார்க்க முயலும் வாய்ச்சவடால் வீரர்கள், அப்துல் ரகுமான் சொன்னதை நினைவில் கொள்வது நல்லது.

இன விடுதலை பற்றிப் பேசுகிற தகுதி பெரியார் வழி அண்ணாவுக்கும், அண்ணா வழி கலைஞருக்கும், கலைஞர் வழி தளபதிக்கும் இயல்பாக வாய்த்ததைப் பார்த்து எவரேனும் மனக்கிலேசம் அடைந்தால், வரலாறு அவர்களைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்துவிடும்.

அவதாரக் கவிஞன் வாலி இதைத்தான் சொன்னார்.

**“இனவிடுதலைக்காக உண்ணாவிரதம் நோற்காமல், அண்ணாவிரதம் நோற்றவன் நீ! அதனால்தான் அண்ணனுக்குப்பின் அண்ணனானாய்….. அந்த மன்னனுக்குப்பின் மன்னனானாய்”**

என்கிற வாலியின் வார்த்தைகள் வலுவானவை.

வாலி குறிப்பிட்டதைப் போல், **“குளித்தலைக்குப் பிறகு குனியாத தலையாகவே இருந்தது கலைஞரின் தலை. சிலர் வாழ்ந்த வாழ்வை அவர்களது வண்டவாளம் சொல்லும். கலைஞரின் தியாக வாழ்வை கல்லக்குடி தண்டவாளம் சொல்லும்”** என்கிற வாலியின் கவிதை, கொண்ட கொள்கைக்காகத் தன்னையே கொடுக்கத் தயாராயிருப்பவன்தான் தலைவனாய் இருக்கத் தகுதி படைத்தவன் என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. வெறுங் கண்ணால் பார்ப்போரைக் காட்டிலும், வரலாற்றுப் பார்வையோடு கலைஞரைப் பார்ப்போருக்கே அவரது நிஜமான உயரம் புலப்படும் என்கிற உண்மையை வாலியின் வார்த்தைகள் பலப்படுத்துகின்றன.

**“கலையானாய்! காவலானாய்! களத்துக்கு வேல்கள் செய்யும் உலையானாய்!”** என்கிற கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதை, கலைஞரின் பன்முகத் தன்மையை எடுத்துரைக்கிறது.


**“உன்மீது அடித்த புயல் இமயமலை மீது அடித்திருந்தால் இமயம் கொஞ்சம் இடம்பெயர்ந்திருக்கும்! உன் மீது அடித்த வெயில் சமுத்திரம் மீது அடித்திருந்தால் பாதி கடல் பாலையாகியிருக்கும்! நீயோ காற்றில் சவாரி செய்தாய்….. வெயிலை சமாதி செய்தாய்”** என்கிற வைரமுத்துவின் கவிதை, இடர்களையும் இன்னல்களையும், தடைகளை யும் தடுப்புகளையும்தகர்த்தெறிந்து முன்னேறிய முத்தமிழறிஞர் கலைஞரின் துணிவைக் கொண்டாடுகிறது.

**“வண்ணத்தமிழ்ப் பாக்களுக்கு வளைகாப்புச் செய்தவர்”** – என்கிறார் கபிலன். வளைகாப்பு செய்ததுடன் நின்றுவிட வில்லை. தமிழினத்திற்கு இடப்பட்ட விலங்கை தன்னந்தனியாகத் தகர்த்தெறிந்துவிட்டுத்தான் வேறு வேலை பார்த்தார். இதையும் மறக்காமல் பதிவு செய்திருக்கிறார் வாலி.

**“ஆண்டு 2007ல் எமனிடமிருந்து என்னை மீட்டாய்! அதற்கு முன்…. ஆண்டு 2006ல் ஓர் வுமனிடமிருந்து தமிழ் மண்ணை மீட்டாய்”** என்கிற வாலியின் கவிதை, சமகாலத்திலேயே கலைஞரின் பேராண்மையைப் பதிவு செய்த கவிதை. வாலியின் வார்த்தைகள், கலைஞரின் பேராண்மையை மட்டுமின்றி பேரன்பையும் பறைசாற்றுகின்றன. செந்தமிழால் தன்னை வைதாரையும் வாழவைத்தவர் கலைஞர். தன்மீது வீசப்பட்ட தமிழ் மலர்களைப் போல, தன்மீது வீசப்பட்ட தமிழ் வசைச் சொற்களையும் நேசிக்கும் அளவுக்கு கனிவு இருந்தது கலைஞரின் இதயத்தில்!

**“கலைஞர் என்பது தாயின் ஆண்பால் பெயர். பிறக்காத குழந்தைக்கும் தொட்டில் கட்ட அவரிடம்தான் இதயம் இருக்கிறது”** என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது, இந்தப் பேரன்பைத்தான்! அதற்குக் காரணம் அண்ணாவின் இதயம் கலைஞரிடம் இருந்ததுதான். அருந்தமிழ்க் கவிஞர் மு.மேத்தா சொல்வதைப்போல், **“அண்ணா ஒரு அணையா விளக்கு! கலைஞர் எண்ணெயாக தன்னையே எந்நாளும் தருவதால் அண்ணா ஒரு அணையா விளக்கு”** என்பது நாம் பெருமிதப்படவேண்டிய பேருண்மை. **“திருக்குவளை இல்லாது போயிருந்தால், தமிழகத்தில் இருகுவளைதான் இருந்திருக்கும்”** என்று கலைஞரின் சிறப்பை கவிஞர் - பேராசிரியர் ஷாஜாகனி மிக எளிமையாக விளக்கி இருப்பார். திராவிட மாடல் பாணியில் சாதனை படைக்கும் தளபதியின் நேர்த்தியான தலைமையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மூவரின் கோட்பாட்டுக்கு வலு சேர்ப்பதாக இருக்கும்.


## நன்னெறி என்பது எது?



**எ**ந்தக் குறிக்கோளை அடையவும் அது குவிந்து கிடக்கும் பொருள் வளமாயினும், நில வளமாயினும், அதிகாரமாயினும், மதச் சார்பின்மையாயினும், ஒவ்வொன்றையும் அல்லது அனைத்தையுமே அதிரடித் தீவிரச் செயல்களால்தான் வென்றெடுக்க முடியும் என்ற வேண்டாத நினைப்பை விட்டொழிப்பதுதான் மனித சமுதாயத்திற்கு; சற்றுத் தாமதமாயினும் நன்மை பயக்கக் கூடிய சாத்வீக மார்க்க நன்னெறியாகும்.

“இல்லை; இல்லை ! மூட்டைப் பூச்சியை விரட்ட, வீட்டைத்தான் கொளுத்துவேன்” என்பது விதண்டாவாதமாகும். அதன்படிச் செயல்படுவதும், விபரீதச் செயல் மட்டுமல்ல; விபரம் புரியாதோர் நடத்தும் வேதனைச் செயலுமாகும்! எனவே தீவிரவாதத் தீப்பந்தத்தைக் கீழே போட்டு விட்டு; மூட்டைப் பூச்சியை விரட்டி வீட்டைக் காத்திட; தக்க மருந்து அடிப்போம்; தவறாமல் அகந் தூய்மை, புறந் தூய்மையைக் கடைப் பிடிப்போம் ! தேனில் குழைத்துக் கொடுத்தாலும் ‘ தீவிரவாதம்’ என்பது மருந்தாகி விடாது; தீராத விஷமேயாகும்.

**- கலைஞர்**



## அரசியல்!

**அ**ரசியல்; நிலம் போன்றது! அது ஜனநாயகப் பயிர் வளர்க்கப் பயன்பட வேண்டும் - அந்தப் பயிர் மட்டுமே வளர்ந்தால் மனித வளம் - மதச்சார்பற்ற - மத நல்லிணக்க வளம் செழித்துக் குலுங்கும்.

அரசியல் நிலத்தில் தன்னலம் வளர்க்க, களைகளாய்த் தோன்றுவோர்; களையப்பட வேண்டியவரேயாவர் !

அப்படிக் களைந்து விட்டால்; அரசியல் தூய்மையாகும்! ‘அறநெறி தானிய விளைச்சல்’ அமோகமாகப் பெருகும்! குளத்தில் படர்ந்துள்ள பாசியை அகற்றாமல்; குளத்தைப் பழிப்பது; பழிப்போரின் குற்றம்தானே?

பாசியைக் கண்டுகொள்ள; முதலில் நம் கண்ணில் விழுந்துள்ள தூசியை அகற்றிக் கொள்வோம்.

**- கலைஞர்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131